In addition to the additional revenue assessment, there is the water rate. So far as water rate is concerned, I want to remind hon. Members about the legal nature and the position of the water rate. Water rate is not a tax according to the Madras Irrigation Cess Act of 1865, which provision is now sought to be omitted in clause 21. This is a very wrong provision. It is a very dangerous provision according to me. I will explain it now. They want to say that it is in the nature of a land tax. It is not so. All these years, it has been only a fee. This was made clear under the Madras Irrigation Cess Act. In that Act, it is stated—

'For the avoidance of doubt it is hereby declared that water-cess leviable under this Act is not a tax on land but is a fee for the water supplied or used for the irrigation of land'.

It is not a tax at all. The difference is very well explained by the Supreme Court in its judgment of 1954, and that is accepted. That is, a fee is a *quid pro quo* for services rendered while a tax is an imposition by the State for various purposes. The State wants money. It can impose a tax. Now in clause 21, this provision is sought to be omited. Why? They in clause 21. this provision is sought to be omitted. Why? They want to leave out this provision and bring in the words 'a cess in the nature of a land tax'. If the Government want to call it a cess, let them call it so. I am not able to understand the expression 'cess in the nature of a tax'. According to me, it is not at all correct. Cess is different from tax. Therefore it is I am rather forcefully stating my point. Once the Government come to this position, there will be no end for legislation of the same kind. Why should we omit sub-section (2) of the Madras Irrigation Cess Act of 1865? It is stated in the Statement of Objects and Reasons that the Government have executed so many irrigation projects. I am thankful to them for all that. I am not saying anything in disparagement of what the Government have done for the past many years in respect of the irrigation projects. But the question is that the Madras Irrigation Cess Act of 1865 definitely says, 'Provided also that no water cess shall be leviable under this Act in respect of water supplied or used for the irrigation of land held under ryotwari settlement which is classified and assessed as wet, unless the land be irrigated whether voluntarily or involuntarily and whether wholly or in part—

(i) from any source hereinbefore mentioned, not being a source which has been assigned by the Revenue authorities or adjudged by a competent Civil Court as the source of irrigation of such land; or'

Therefore, the supply of water from an accustomed irrigation source pointed out by the revenue authorities or in the case of dispute, from the source pointed out by the Court, is taken free of charge. The State is bound to give the ryots water so as long as

28th February 1963] [Sri K. Balasubramanya Ayyar]

the land is registered and classified as wet. This is the important provision in the Madras Irrigation Cess Act, 1865. Then the Act says—

'(ii) from any source assigned or adjudged as aforesaid in respect of such land, otherwise than in accordance with any notification or order of the State Government or of any authority subordinate to them, regulating or specifying the time, method and conditions of supply of water for the irrigation of such land from such source and the number of crops which may be irrigated on such land with supply free of separate charge'.

Whether the irrigation be voluntary or involuntary, no charge should be levied. This provision is now being removed. Sir, there is this fundamental difference between cess and fee. The ryots have the right to get the accustomed water-supply free of charge. So far as the new projects are concerned, because they are new sources, they stand on a different footing. But so far as the lands under the ancient Cauvery delta and other big rivers and tanks are concerned, the ryots should not be asked to pay any additional assessment. Those lands which have been registered as wet in the records and which get water from the accustomed water sources so adjudged by the revenue authorities should get their water-supply without any additional charge. That is the law. That is the fundamental right which we have got. The Government must state that the people will get their water-supply not only from the accustomed sources of supply but also from new sources. Then only there is a case for any additional assessment. Otherwise, it will cease to be a fee. There has been no discussion in the Select Committee about this. Clause 21 says—

'In section 1 of the Madras Irrigation Cess Act, 1865 (Madras Act (VII of 1865),—

(i) in sub-section (1) for the words "to levy at pleasure a separate fee for such water", the words "to levy on the land so irrigated a separate cess by way of land tax for such water" shall be substituted'.

Every word in the Act is important. First, the tax is not introduced here as a land tax. It should be called a cess. The Act is called the Madras Irrigation Cess Act. They want to use the word 'cess', but then add another expression 'cess in the nature of a land tax'. This is a departure from principles. Only when Government can show that the person gets water not only from the accustomed source of supply but also from new sources, they can impose this charge. Why should Government remove sub-section (2)? The Government can always prove that more water is being supplied and, therefore, they want a separate fee. The Madras Act of 1865 begins with the preamble—

'Whereas in several districts of the Madras Presidency, large expenditure out of Government funds has been, and is still being, incurred in the construction and improvement of works of irrigation and drainage

(Interruption by Sri M. Seshachariar). This has been working in their minds. It is for that purpose that they are adding this charge. Still they wanted that persons under the accustomed sources of supply should not be taxed to any additional assessment. But now the Government have executed large irrigation projects. I started by saying "We are all thankful to the Madras Government for what they have done all these years in the matter of irrigation projects." I am not questioning them at all. But the question is, how far the Irrigation Act can be amended—this is the important point—to the great advantage of
3-10 p.m. the country. After Independence our Government take credit for doing many things. They say that they do not care for the profits that may accrue from any expenditure on the irrigation projects. Formerly, when the British were ruling and the I.C.S. officers were carrying on the administration, they wanted the Chief Engineers and others to give them particulars as to the amount spent on each irrigation project and the profit that would be derived from it—whether it would be four or five per cent. But now there is no such thing. We are here to spend any amount not for the purpose of increasing the cess as land tax. When a certain amount is spent and there is benefit to the ryots, as a result of irrigation sources, of course, the Government are at liberty to increase the assessment. But when that is not the case, I would request the Government not to approach this levy as a water tax but as a fee. I will oppose clause 21, if not the whole Bill, because it goes to the root of the matter. Hitherto we were thinking that the State was bound to ensure the accustomed supply of water for lands registered as wet for a long time now. Their position must not be changed. (Interruption by Sri M. Seshachariar). Why should the words "land tax" be used? Let the hon. Member argue as a lawyer and not as a partyman. As a lawyer if the hon. Member argues and convinces me, I shall support him. If I do not agree with him, I have to state my view as a Member of the Legislature. If no change is contemplated, why should there be a clause? The Law Department have carefully thought about it and used the words "land tax". I may even be prepared to concede water-tax, but I do not concede that it should be treated as a land tax. It should always mean a water fee. That is the only honourable way in which the State should look at this. In 1865 when the British ruled the country, to clear all doubts it was said that it must be a fee. Why do the Government want to use the word "tax" now? Why should we use unnecessary words? If clause 21 had not been incorporated in the Bill, I would not have wasted so much time over this. Since it is there, it will be taken advantage of by some other Government, by some other party that may come into power. A party which follows a certain policy may also do it. Those who do not agree with this Bill may change it. That is why so far as this clause is concerned, it must be opposed. So far as the water cess is concerned, the less said about it the better. I have given notice of amendments. I shall speak on them when the time comes.

28th February 1963] [Sri K. Balasubramanya Ayyar]

In conclusion, this Bill seems to be at the present juncture unnecessary. Any additional imposition will be a hardship on the ryots as well as the landholders and the mirasdars. On the one hand, the Government help them by giving them fertilizers and other things and ask them to cultivate and increase the production on the land. On the other, they go on imposing this assessment. It really depresses the ryots. It frustrates their hopes. In the present situation of the country, this unnecessary frustration need not be caused.

*திரு. எம். சுப்பையா செட்டியார் :* தலைவரவர்களே, இந்த நில வரி உயர்வு மசோதா பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன். நண்பர் பாலசுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டது போல, இந்தக் கூடுதல் வரி விதிப்பு மசோதாவை இந்தச் சந்தர்ப்பத்தில் கொண்டு வராமல் இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் விலைவாசிகள் ஏறியுள்ள இந்த நேரத்தில், விவசாயச் செலவுகள் அதிகரித்துள்ள இந்த நேரத்தில், விவசாயத்தால் விவசாயிக்கோ அல்லது குத்தகைதாரருக்கோ ஏதாவது மிச்சம் வருமா என்றால், அதற்கு வழியிருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலைமையில் இந்தக் கூடுதல் வரி விதிப்பதானது, நாட்டுக்கு முதுகெலும்பு போலிருக்கின்ற விவசாயி நசித்துப் போகக்கூடிய நிலையை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பார்தால் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தவிரவும், இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் கொடுத்து, ஸ்ரீமான் பாலசுப்பிரமணிய ஐயர் தெரிவித்தது போல, கிட்டத்தட்ட 50 சத விகிதம் 100 சத விகிதம் கூடுதல் வரி விதிக்க வழி செய்திருக்கிறார்கள். சில யூனியன்களிலே ஏற்கனவே கூடுதலான வரி விதித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வரி கூடிக் கொண்டிருக்கும்போது, அரசாங்கம் வேறு கூடுதல் வரி விதிக்க புதிய மசோதாவைக் கொண்டு வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இந்தக் கூடுதல் வரியை விவசாயிகளால் தாங்க முடியாது என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால், அரசாங்கம் தெரிவித்துள்ளபடி, ஒரு போக சாகுபடி நஞ்செய் நிலத்துக்கு (Single-crop wet land) வரி 18 ரூபாயும், நீர்த் தீர்வை (water cess) 15 ரூபாயும் சேர்ந்து, மொத்தம் ரூ. 33 அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டி ஏற்படும். இருபோக நஞ்செய் நிலத்துக்கு (Double-crop wet land) ரூ. 27 வரியும், நீர்த் தீர்வை ரூ. 15ம் சேர்ந்து, மொத்தம் ரூ. 42 செலுத்த வேண்டி வரும். பஞ்சாயத்துக்களுக்குச் செலுத்த வேண்டிய வரி தவிர இருக்கிறது. அதையும் சேர்த்துக் கணக்குப் பார்த்தால், ஒரு போக நஞ்செய் நிலத்துக்குக் கிட்டத்தட்ட ரூ. 50லிருந்து ரூ. 55 வரையும், இருபோக நஞ்செய் நிலத்துக்கு, கிட்டத்தட்ட ரூ. 60-ம், வரியாகச் செலுத்த வேண்டியிருக்கும். அதே நேரத்தில் விவசாயிக்கு நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருமானம் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால், இன்றுள்ள நெல் விலையைக் கணக்கில் கொண்டு பார்த்தால்—அரசாங்கம் கொடுக்கும் விலையை

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [28th February 1963

விட்டு விடுவோம்—நடப்பில் இருக்கிற விலையை எடுத்துக்கொண்டால் கூட, இன்று தஞ்சாவூரிலும், இதர இடங்களிலும் மூட்டை ரூ. 16 முதல் ரூ. 16½ வரை விற்கிறது. இந்த விலைப்படி கணக்
3-50 p.m. கிட்டுப் பார்த்தால், ஒரு போக நஞ்சையில் ஏக்கர் ஒன்றுக்கு 15 மூட்டை நெல் கிடைக்கிறது என்று வைத்துக் கொண்டால், மொத்த வருமானம் ரூ. 240 ஒரு வருடத்திற்கு. இதில் நிலச்சீர் திருத்தச் சட்டம்பிரகாரம், நிலச சொந்தக்காரனுக்கு 40 சத விகிதமும், குத்தகைகாரனுக்கு 60 சத விகிதமும் என்ற கணக்கைப் போட்டுப் பார்த்தால், நிலச் சொந்தக்காரனுக்கு ரூ. 96-ம், குத்தகைதாரனுக்கு ரூ. 144-ம், மொததம் கிடைக்கிறது. அதே மாதிரி, இருபோக நஞ்செய் நிலத்தில் ஏக்கருக்கு 25 மூட்டை சராசரி கண்டுமுதல் ஆகும் என்றால், மொத்த வருமானமாகிய ரூ. 400-ல், நிலச்சீர்திருத்தச் சட்டப்படி, நிலச் சொந்தக்காரனுக்கு ரூ. 160-ம், குத்தகைதாரனுக்கு ரூ. 240-ம் மொத்தமாகக் கிடைக்கிறது. இதில் விவசாயச் செலவைக் கழித்துவிட்டுப் பார்த்தால், விவசாயிக்கோ, குத்தகைதாரனுக்கோ கிடைக்கிற நிகர வருமானம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. விவசாயியாக இருந்தாலும் சரி, நிலச் சொந்தக்காரனாக இருந்தாலும் சரி, Absentee landlord ஆக இருந்தாலும் சரி, நிலத்தைப் பாதுகாக்க காவலாளி, Clerk போட்டு பரிபாலிக்க வேண்டியிருக்கிறது. ஆக செலவைக் கணக்கில் கொண்டு பார்த்தால், ஒருபோக நஞ்சை நிலச் சொந்தக்காரனுக்கு ரூ. 96 வருமானமாக வரும்போது, செலவு வகையில, வரியாக ரூ. 50-ம், இதரச் செலவுகள் ரூ. 25-ம் சேர்த்து, மொத்தம் அவனுக்கு ரூ. 75 செலவாகிறது. நான் சொல்லுவது குறைந்த கணக்கு. இன்னும் அதிகமாக அவனுக்குச் செலவாகும். இருந்தாலும் இந்தக் குறைந்த கணக்குப்படி பார்த்தாலும், ஒருபோக சாகுபடி நிலச் சொந்தக்காரனுக்கு வருஷத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு நிகர வருமானம் ரூ. 21-தான் கிடைக்கிறது. ஒரு போக சாகுபடி நஞ்செய் நிலக் குத்தகைதாரனுக்கு மொத்த வருமானமாகிய ரூ. 144-ல் கிட்டத்தட்ட வரியும், இதர விவசாயச் செலவும் சேர்த்து ரூ. 125 செலவாகிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால், ஒரு வருஷம் பூராவும் பாடுபட்டு உழைக்கிற விவசாயிக்கு ரூ. 19 கூட மிஞ்ச வழியில்லை. இதே மாதிரி இரு போக சாகுபடி நஞ்செய் நிலத்துக்கு கணக்குப் பார்த்தால், இருபோக சாகுபடியில் நிலச் சொந்தக்காரனுக்கு கிடைக்கும் மொத்த வருமானமாகிய ரூ. 160-ல் செலவு ரூ. 100 போக, நிகர வருமானம் ஒரு வருஷத்திற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 60 தான். ரூ. 4,000 போட்டு நிலத்தை வாங்கி, அதை நம்பி வாழக்கூடிய ஏழை விவசாயியாக இருந்தால், அவனுக்குக் கிடைக்கும் நிகர வருமானமாகிய ரூ. 60-ஐ வைத்துக்கொண்டு எப்படி அவன் ஜீவனம் செய்ய முடியும் என்று சீர் தூக்கி பார்க்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரி குத்தகைதாரனுக்குக் கிடைக்கக் கூடிய 240 ரூபாய் மொத்த வருமானத்தில், செலவு ரூ. 200-க்கு குறையாது. அவனுக்கு மிஞ்சுவது ரூ. 40 தான். இந்த நிலைமையில் அரசாங்கம் மேலும் வரி போட்டு எடுத்துக் கொண்டு விட்டால், நிலச் சொந்தக்காரர்களுக்கு ஆகட்டும், அல்லது குத்தகைதார

28th February 1963] [திரு. எம். சுப்பையா செட்டியார்]

னுக்கு ஆகட்டும், என்ன நன்மை ஏற்படும்; அவன் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதால், அவனுக்கு என்ன நன்மை உண்டு என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகள் சொல்லுகிற கணக்கை வைத்துக் கொண்டு வரிசூல் செய்யவேண்டுமென்று கருதி, அரசாங்கம் வரியை உயர்த்திக்கொண்டே போனுல், நாட்டுக்கு முதுகெலும்பு போல் இருக்கக்கூடிய விவசாயிகள் நசித்துப் போகிற நிலைமை ஏற்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்து, அதற்குத் தகுந்தபடி செய்தால் நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்த வருமானமாகிய ரூ. 21, ரூ. 19, ரூ. 60, ரூ. 40-ஐ வைத்துக்கொண்டு, அதிக பாடுபட்டு நிலத்தில் கூடுதல் விளைச்சல் செய்ய நிலச்சொந்தக்காரனுக்கோ, குத்தகை தாரனுக்கோ ஊக்கம் இருக்குமா என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாளுக்குநாள் விவசாய உற்பத்தி குறைந்து வருவதற்கு தண்ணீர் வசதி, இதர வசதிகள் போதவில்லை என்ற காரணத்தோடு, கூடுதல் வரிபோடுவதன்மூலம் ஊக்கமும் குறை கிறது என்ருல், அதன் விளைவாக என்ன நிலைமை ஏற்படும் என்ப தையும் அரசாங்கம் சிந்திக்கவேண்டும்.

அடுத்தபடியாக, சமீபத்தில்தான் அரசாங்கம் நிலச்சீர்திருத் தச் சட்டத்தைக் கொண்டு வந்து, விவசாயிக்கும், நிலச் சொந்தக் காரனுக்கும் இருந்துவந்த நல்லுறவை நீக்கி, அவர்கள் இருவரும் யாருக்கு எது சொந்தம், எதை எப்படி எடுத்துக் கொள்ளுகிறது என்ற விவகாரத்தில் ஈடுபட்டு, ஒருவரை ஒருவர் கோர்ட்டில் சந்திக்கும்படியான நிலைமையை உண்டாக்கியிருக்கிருர்கள். இந்த நிலைமையில், அவர்களுக்கு ஊக்கம் தரக்கூடிய காரியத்தைச் செய் யாமல், அவர்கள்மேல் அதிக பளுவை ஏற்றினுல் விவசாயம் பாதிக்கப்படும் என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். இந்த மாதிரியான கொள்கையை அரசாங்கம் கடைபிடித்தால், உலகில் கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு நாடுகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய விளைச் சல் குறைவு நம்முடைய நாட்டிலும் ஏற்பட்டு, பஞ்சத்தை உண்டு பண்ணும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரியான காரியங்களில் ஈடுபட்டு, மக்கள் வரிச்சுமையைத் தாங்க முடியாமல், நம்பிக்கை இழக்கும்படி நேரிட இடம் இருக்கக் கூடாது என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செட்டில்மெண்டைப்பற்றி பாலசுப்பிரமணிய ஐயர் எடுத்துச் சொன்ஞர்கள். செட்டில்மெண்டு 30 வருடத்திற்கு ஒருதடவை எடுத்துப்பார்க்கும்போது, அந்த நேரத்தில் நிலத்திலிருந்து என்ன வருமானம் வருகிறது, செலவு என்ன ஆகிறது என்று கணக்கெடுத் துப் பார்க்கிருர்கள். பாலசுப்ரமணிய ஐயர் தெரிவித்ததுபோல, 1924-ல் கலம் நெல் 14 அணு விற்கும்போது, பலர் நிலத்தை விற்றுத்தான், அல்லது அடமானம் வைத்துத்தான் வரி கொடுத் திருக்கிருர்கள். 1924-ல் கலம் 14 அணு விற்றது, இன்று 8 ரூபாய் விற்கிறது. ஒன்றுக்கு 8 வீதம் விலை உயர்ந்திருக்கிறது, ஏன் நில வரியை உயர்த்தக்கூடாது என்று அரசாங்கம் கேட்கலாம். அனுல்

[திரு. எம். சுப்பையா செட்டியார்] [28th February 1963

கூட விவசாயிகள் வரியைச் செலுத்துவது சிரமமாக இருக்கிறது என்றுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இன்று விவசாயச் செலவு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று அரசாங்கம் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். அதை விட்டுவிட்டு வரி போடுவதையே கொள்கையாகக் கொண்டு, மக்கள் மேல் வரியைச் சுமத்திக்கொண்டு போனால், அவர்களுக்கு ஹிம்சை ஏற்படுவதோடு இல்லாமல், அரசாங்கத்திற்கே சிரமம் ஏற்படக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நிலைமையில் நாளைக்கு புது வரிகள் வர இருக்கின்றன. அது பற்றி நாளைக்குப் பேசிக் கொள்ளலாம் என்றாலும் வரிகள் போட்டால் தாங்கக்கூடிய அளவுக்குப் போடவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மனு தர்மத்தில் சொல்லியுள்ளபடி, வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு வரி போட்டால்கூட, இந்தத் தொந்திரவுகளே இருக்காது. ஒரு சட்டமும் இயற்ற வேண்டிய அவசியம் இருக்காது. அந்த மாதிரி இருந்தால், நியாயம் என்று சொல்ல முடியும். ஆனால் ஒரு ரூபாய் சம்பாதித்து, 1-½ ரூபாய் வரி கொடுக்கும்படி ஏற்பட்டால், இருக்கிற சொத்தை விற்றுத்தான் கொடுக்க முடியும். இப்போது தங்கம் கூட இல்லை, விற்றுக்கொடுக்க. லாரிகள் மீது அதிக வரி போட்டார்கள். இன்றைக்கு அதனால் லாரிக்காரர்கள் பிழைக்க வழியில்லாமல், லாரியை விற்றுத்தான் வரி கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஸ்ஸுக்கு ரூ. 300, ரூ. 400 வருமானம் வரக்கூடிய பஸ்காரர்களுக்குப் பரவாயில்லை. 100 ரூபாய் வருமானம் வரக்கூடிய பஸ்காரர்களின் நிலைமை மோசமாகி விட்டது. அதிகாரிகள் சொல்லிவிட்டார்கள், ஆகவே வரி போட வேண்டுமென்று போடாமல், சீர்தூக்கிப் பார்த்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஜனங்கள் அரசாங்கத்தை நம்பிக் கெட்டது போதும், ஆண்டவன்தான் நம்மைக் காப்பாற்றவேண்டுமென்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள் என்பதையும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து, எனக்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. அ. க. தங்கவேல் முதலியார் : தலைவர் அவர்களே, நீர் இல்லாவிட்டால் நிலம் இல்லை. நிலம் இல்லை என்றால் நீரும் இல்லை. ஆகையால் இரண்டைப்பற்றியும் இதில் பேச இருப்பதால் நிலத்திலே இருக்கிற கஷ்டங்களை முதலிலேயும், அதற்கு அடுத்தாற்போல் நீரைப்பற்றியும் சொல்லுகிறேன். சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷம் விவசாயிகள் எப்படி இருக்கிறார்கள் என்றால் ஒன்றும் இல்லை, பாப்பர்தான். காரணம் என்ன என்று கேட்டால் கூலியில் ரூபாய்க்கு எட்டு அணா ஜாஸ்தி. அப்படி கஷ்டப்பட்டு உற்பத்தி பண்ணினாலும், உற்பத்தி பண்ணின சரக்கைப் பார்க்கிறபோது ஒன்றும் இல்லை, ரூபாய்க்கு விலையில் நாலணா போச்சு. ரூபாய்க்கு கூலியிலே ஒரு எட்டணா. அதிலே விலையில் நாலணா என்று இப்படியாகப் போச்சு. இந்த நிலைமையில் உற்பத்தி பண்ணினாலும், அப்படி உற்பத்தி பண்ணின சரக்கைச்

28th February 1963] [திரு. அ. க. தங்கவேல் முதலியார்]

சரியான விலைக்கு வாங்க மார்க்கெட்டில் ஆள் இல்லை. என்ன பண்ணுவான் விவசாயி? வந்த விலைக்குத் தள்ளி விட்டுப் போய் விட்டான். இதுதான் நிலைமை. என்னைக் காட்டிலும் பெரிய மிராசுதார்கள், ஜமீன்தார்கள் எல்லாம் இங்கும் இருக்கிறார்கள். வருகிற லாபம் யாருக்கு? கூலிக்காரனுக்கு லாபம். நிலம் சொந்தக்கார விவசாயிகள் உற்பத்திபண்ணுவார்கள். அவர்களிடம் கூலி வேலை செய்கிறவர்கள் நன்றாக இருப்பார்கள். கரண்ட் வேறு சார்ஜ் அதிகம் போடப்பட்டு இருக்கிறது. இன்னும் வரி ஏறிக் 4-00 p.m. கொண்டே போகிறது. விலை இறங்கி விட்டது. இப்பொழுது தான் இருக்கிறது கஷ்டம். இதற்கு முன்னால் விலை ஓடிக் கொண்டே இருந்தது. இப்பொழுது எதையும் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும். Standard Acre-ஐப் பற்றி இந்த வருஷம்தான் இந்தச் சட்டம் ஒன்றும் இதைப் பாதிக்காது என்று சொல்லப்படு கிறது. ஆனால் ஜமீன்தார்கள், இராஜாக்கள் போனமாதிரி இதுவும் மாற்றப்பட்டு விட்டால் இப்பொழுது இருக்கிற ஸ்டாண்டர்டு ஏகர் விஸ்தீரணம் குறைந்துவிடும். இம்மாதிரி ஏதாவது வந்து கொண்டே இருக்கிறது. [இந்த நாற்காலி வேறு கஷ்டமாக இருக் கிறது. பிடித்துக் கொண்டு நின்று பேசமுடியவில்லை.] போன வருஷம் பஞ்சாயத்து வரி 45 நயாபைசா போட்டார்கள். அதற்கு முன்பு டிஸ்ட்ரிக்ட் போர்டு போட்டது. இப்பொழுது நாம் வேறு போடுகிறோம். இப்படி கணக்கு போட்டால், ரூபாய்க்கு 1-8-0-க்கு மேல் ஆகிறது. தூக்கமுடியாத பளுவை தூக்கினால் கழுத்து முறி டும். விவசாயிகள் எவ்வளவு தூரம் நல்லபடியாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் போகிறபோதே பார்க்கலாம். மந்திரிகள் போகிற போது, மாலை போட்டு மரியாதை பண்ணுகிறார்கள் என்பதற்காக விவசாயிகள் பணக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதாக நினைத்துவிடக் கூடாது. ஏதோ பர்மிட் 'கிர்மிட்' கொடுக்க மாட்டார்களா என்று செய்கிறார்கள். சுய லாபத்திற்காகத்தான் செய்கிறார்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எறும்பு இருக்கிற மாலை யைக் கூட போடுகிறார்கள். கழுத்தெல்லாம் எறும்பு கடிக்கிறது.

திரு. அ. க. தங்கவேல் முதலியார்: வரி போடக் கூடாது என்று சொல்லவில்லை. செய்கின்றதை காலத்தைப் பார்த்துச் செய்யுங்கள். பாங்குகள் உணவுப் பொருளின்மீது கடன் கொடுக் கும் காரணமாக விலை ஏறுகிறது என்று சென்ற வருட கூட்டத்தில் பேசியபோது, அதைத் தடுக்க இந்திய சர்க்காருக்கு அதிகாரம் என்று இந்த சபையில் சொல்லப்பட்டது. இப்பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தை பயன்படுத்தினார்கள். இது வந்தவுடன் பாங்குகள் உணவுப் பொருளின்மீது கடன் தரவில்லை. மார்கெட்டில் நெல் வாங்க மாட்டேன் என்று வியாபாரிகள் சொல்லிவிட்டார்கள். ஒரு நெல் பாங்க் உள்ளே போகவில்லை. ஆயிரம் ரூபாய் முதல் வைத்து வியாபாரம் செய்கிறவன், ஆயிரம் ரூபாய்க்குத்தான் வியாபாரம் பண்ணலாம் இப்பொழுது. அப்பொழுது 1,000 ரூபாயை வைத் துக்கொண்டு, 5,000-க்குப் பண்ணலாம். இந்த நிலைமையில் கஷ்டம்.

விவசாயிகள் மார்க்கெட்டில் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து கேட்ட விலைக்கு போட்டுவிட்டு போய்விட்டார்கள். 200-க்கு கணக்கு போட்டுக்கொண்டு எடுத்துக்கொண்டுபோனால் ரூ. 150 தான் கைக்குக் கிடைக்கிறது. எங்களைப் போன்றவர்கள் எப்படியாவது இருக்கலாம். இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் உள்ளவர்களையாவது கவனிக்க வேண்டும். கசக்காலில் பயிர் பண்ணுகிறவர்களுக்கு எல்லாம் அந்தக் காலத்தில் அதிகத் தீர்வை. இந்த நிலம் இருக்கிறதே, அதற்கு அதிகத் தீர்வை என்பது அந்தக் காலத்திலே, 2 போகம், 3 போகம் கசக்காலில் பாய்ச்சலில் பயிர் பண்ணினார்கள். இப்பொழுது நீர்மட்டம் குறைந்து விட்டதால், அந்த கசக்கால் நிலங்கள் புஞ்சை நிலங்களாக காட்சியளிக்கின்றன. இப்பொழுது அதை செடில்மெண்டு பண்ணி ஸ்டாண்டர்டு ஏகர் நிர்ணயிக்க வேண்டுமென்றும், சென்ற உச்சவரம்பு சட்டம் வந்த போது சொன்னேன். அது அவசியம் செய்ய வேண்டியதுதான் என்று மந்திரி மாணிக்கவேலர் சொன்னார். இப்பொழுது அவர் இல்லை. டில்லிக்குப் போய் விட்டார். தாங்களாவது அதைப் பரிசீலனை செய்து இப்பொழுதாவது கசக்காலில் தண்ணீர் சரியாக இருக்கிறதா, அல்லது இல்லையா என்பதைப் பார்த்துத் தீர்வை போட வழிவகை செய்ய வேண்டும். புஞ்சை நிலத்திலே எல்லாம் பம்பு செட் போட்டுவைத்திருக்கிறார்கள். அந்த இடத்திலே எல்லாம் இந்த வரி போட்டால் என்னவாகும்? அதற்கு மறுபடியும் வரி போடக் கூடாது. செய்கிறபோது எல்லாவற்றையும் பார்த்துச் செய்யுங்கள். நீங்கள் உத்திரவு போடுகின்றபோது எந்தெந்த இடத்தில் கசக்காலில் பாய்ச்சல் அடைப்பட்டு கிடைக்கிறதோ அங்கே எல்லாம் என்ன பண்ணவேண்டும் என்று பார்த்துச் சொல்லுங்கள் இதற்கு வருஷா வருஷம் நிலத்தீர்வை வஜா மனுவைப் போட்டு வஜா வாங்கவேண்டும். இதே மாதிரி ரெவின்யூ டிபார்ட்மெண்டில் ரிகார்டு இருக்கிறது. ரிகார்டைக் கொடுக்க மாட்டார்களா நீங்கள் கேட்டால். ஆகையினால் இதிலே சிக்கல் இருக்கிறது. நமக்குச் சண்டை வந்திருக்கிறது. பணம் வேண்டியது தான். வரி போட்டு வாங்கவேண்டியதுதான். வாங்குவதையும் நல்ல முறையில் வாங்குவது நல்லது. இந்த மாதிரி வருஷா வருஷம் வரி போட்டுக்கொண்டே போனால் என்ன பண்ணுவது? ஆகையினால் பொதுவாக இந்தக் காலத்தில் இதைக் கொண்டு வரவே வேண்டியதில்லை. ஏதோ கொண்டுவந்துவிட்டார்கள். கொண்டுவந்ததை ஏதோ பக்குவமாகப் பார்த்துச் செய்யுங்கள். ஒரே காலத்தில் நில வரியையும் தண்ணீர் வரியையும் போடாதீர்கள். இரண்டையும் ஒரே நேரத்தில் கொண்டுவந்தால் ஆபத்தாகி விடும். இப்பொழுது நீங்கள் ஓட்டுக்குப் போகப் போவதில்லை; 1967-ல் தானே என்று இருந்து விடக்கூடாது. ஆகையினால் தயவு செய்து எல்லாவற்றையும் கருதி, தண்ணீர் வரியே வேண்டாம். ஒன்றை எடுத்துவிடவேண்டும். ஒன்றை மட்டும் வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.

28th February 1963]

SRI M. SESHACHARIAR: Mr. Chairman, Sir, there is only one point which I would like to mention in regard to this matter. The hon. Member Sri K. Balasubramanya Ayyar was mentioning about the inequity of the new legislation in regard to the amendment that it sought to make in the original Irrigation Cess Act. We have got to understand the scope of the Irrigation Cess Act, why it was passed, when it was passed and so on. It was passed at a time when all sorts of improvements had been made and when people were trying to misuse the water. It was only then that that legislation was passed. It was not for the people who took water from the accustomed source of supply. If it is an accustomed source of supply for wet land, no such levy was there and the Irrigation Cess Act would not apply. If it is irregular irrigation, if it is for manavari crop, if it is for dry land, only then that Act would apply. To say that we are changing for something for taking water from the accustomed source of supply and all that is only misleading the whole thing.

The other contention of the hon. Member was that it was only a fee and cannot be a tax. Even that is not correct. Our Courts have decided that. I am sure the Hon. the Leader of the House would make mention of it later when he replies to the discussion. It is a charge on the land. Once it is a charge on the land, what else can it be except a tax? Therefore, to say that it is only a fee and the new legislation affects the foundamental principles . . .

SRI K. BALASUBRAMANYA AYYAR: Mr. Chairman, Sir, I would request to be permitted to interrupt the hon. Member to explain myself. It is different as a charge. As fee, only the provisions of the Revenue Recovery Act are attracted specially by the Section. That is what we must remember, because it is a fee, and, therefore, they are anxious to give power to recover it like any other fee under the provisions of the Revenue Recovery Act. 4-10 p.m.

SRI M. SESHACHARIAR: The hon. Member cannot say that it is not a charge on the land. The cess that is levied is a charge on the land and, therefore, it becomes a tax. The whole matter has been studied by our High Court and a decision given. Therefore, there is no purpose in saying that it is not a tax but something else. It has been decided once for all that it is a tax. As I said it should be remembered that the water tax is levied when water is taken for a wet land from a source not intended to supply water to that wet land. Then if there is irregular irrigation, the cess is levied. If a manavari crop is raised with irrigated water from a Government source, then again the cess is levied. If dry land takes water—it is not applicable to the wet lands—then the cess is levied.

Of course, Sir, I can understand my learned Friend when he said that the measure could have been reserved for some other time. But when we are faced with this emergency and ther

SRI K. BALASUBRAMANYA AYYAR: Therefore Government probably want to take advantage of it to increase their income, there is justification also for their bringing this Bill forward. But there is one thing to which I should like to draw the attention of the Government, which I hope they would take note of and see, if possible, that the Panchayat Unions are restrained to some extent from enhanciing the fees to any extent they like. What I find is this. In some Panchayat Unions, in North Arcot as also in my district, the additional fee or cess has been raised to 60 per cent. In certain cases it has gone up even to 90 per cent and in one Panchayat to 100 per cent. I believe Government have powers under section 117 or 118 of the Act to prescribe limits. If the Government prescribe a maximum rate, then alone will the Panchayat Unions be restrained from collecting such high surcharges. There is another provision also in the Act which my hon. and learned Friend did not refer to. It is section 119. I think, under which the Unions can collect certain levies for certain specified purposes such as kudimaramath or other developmental purposes. Therefore, the amount collected by the Unions would be not less than twice the amount that is paid as land revenue. It may be much more than that in certain places.

SRI M. SESHACHARIAR: In places where they are now paying one rupee as land revenue they would have to pay Rs. 2 as surcharge and in certain places more. I am not trying to hide anything. I am only stating facts. What I want to mention is this. The Government should pass some rule by which the Unions should be restrained from enhancing these charges whenever there is difficulty for them. Last year there was not much of a difficulty. This year they find they are in deficit everywhere and unfortunately, the slab system has been introduced everywhere and that has not been very helpful. Therefore, they are trying to enhance the surcharge wherever possible. In this connection, the Government have also got to bear in mind the fact that they have to pay a matching grant on the collections so made by the Panchayat Unions. Therefore, the Government would do well to pass some rule by which the maximum that could be levied by the Unions are prescribed. That is all I would like to suggest to the Government in regard to this matter. Otherwise, I am prepared to support this measure.

* திரு. ஆர். வெங்கடாசலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நிலத்திற்கான கூடுதல் தீர்வை, தண்ணீர் தீர்வையைப் பொறுத்து அமைந்த பொறுக்குக் கமிட்டிக்கு வருகிற நேரத்தில் அதில் நான் ஒரு அங்கத்தினராக இருந்தும் கூட, சேர்க்கப்பட்ட அங்கத்தினராக இருந்த காரணத்தினால், என்னுடைய திருத்தங்களையோ மற்ற கருத்துக்களையோ அங்கு அதிகமாக எடுத்துக்கூற முடியாத காரணத்தால், இங்கு அதுபற்றிக் கூற விரும்புகிறேன். இந்த மசோதா இந்த நேரத்தில் கொண்டுவரப்படுவது சரியில்லை என்பதைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். தேசிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் உற்பத்தியைப்

28th February 1963] *[திரு. ஆர். வெங்கடாசலம்]*

பெருக்கவேண்டுமென்ற மிக முக்கியமான குறிக்கோளைக் கொண்டிருக்கிற அரசாங்கமானது உற்பத்தியைப் பாதிக்கிற அளவில் நிலத்தில் கூடுதல் வரியையும் தண்ணீர் தீர்வையும் விதிப்பது பொருந்தாது என்று கூற விரும்புகிறேன். ஏற்கனவே மதிப்பிற்குரிய இந்த சபை அங்கத்தினர்கள் பேசும்போது சொன்னது போல, பல வழிகளில் வரி செலுத்தமுடியாமல் இரண்டு, மூன்று ஐந்து ஏக்கர்கள் என்று நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிற சிறிய சொந்தக்காரர்கள் அவதிப்பட்டு வருவதை அடிக்கடி சுற்றுப்பயணம் செய்யும் அமைச்சர்கள் நன்ருக அறிவார்கள். அவர்களிடத்தில் சர்க்கார் அதிகாரிகள் வற்புறுத்துவதன் காரணமாக பல கிராம விவசாயிகள் அமைச்சர் அவர்களிடம் நேரில் சொல்லியும் மகஜர் கொடுத்தும் இருக்கிருர்கள். அப்படியிருக்கிற விவசாயிகளின்மேல் இந்த மசோதாவின் மூலம் கூடுதல் தீர்வை, தண்ணீர் தீர்வை, போடுவது மிகுந்த சிரமத்தைத்தான் கொடுக்கும் என்று கூற விரும்புகிறேன. மதிப்பிற்குரிய அங்கத்தினர் பாலசுப்ரமணிய அய்யா அவர்கள் கூறியதுபோல, பஞ்சாயத்து யூனியன் லோகல் செஸ் சர்சார்ஜ் வேறு விதிக்கிருர்கள். அதுவும் நிலத்தின் வரி மீதுதான் விதிக்கப்படுகிறது. உத்தேசித்த கூடுதல் வரியின் மீது விதிக்கப்படுகிறது அல்ல என்ருலும்கூட அவர்கள் எந்த அளவுக்கு விதிக்கவேண்டுமென்ற நிர்ணயம் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கிடையாது. மதிப்பிற்குரிய ஐயர் அவர்கள் கூறியது போல, ஒரு இடத்தில் 20 சதவிகிதம், மற்ருெரு இடத்தில் 100 சதவிகிதம் என்று விதித்திருக்கிருர்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கும் மற்ருேர் பஞ்சாயத்து யூனியனுக்கும் இப்படிப்பட்ட வித்தியாசம் இருப்பதனுல், ஒரு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மற்ற யூனியனைச் சேர்நத விவசாயிகள் மீது பொருமை ஏற்படும் அளவில், வருத்தப்படும் அளவில், சர்க்கார் அதிகாரம் கொடுத்திருக்கிறது. அதன் மூலமாக ஒரு வேற்றுமை உண்டாவதாகத்தான் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் அதிகமாக வரி விதிப்பதால், அவர்களுக்கு மேட்சிங் கிராண்ட் அதிகமாக சர்க்கார் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த நேரத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் லோகல் செஸ் சர்சார்ஜ் எந்த அளவுக்கு அதிகமாக விதிக்கலாம் என்று விதி அமைக்க சர்க்கார் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் சர்க்கார் எதிர்பார்க்கிற வருமானம் ஒரு கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். இந்த ஒரு கோடி ரூபாய்க்கு இந்த வரியை விதித்து இதன்மூலம் ஏழை விவசாயிகளைப் பாதிக்காத அளவுக்கு மீண்டும் இதை புனராலோசனை செய்யவேண்டுமென்று மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ரூபாயை வேறு வழிகளில் சம்பாதித்துக்கொள்ள வசதி இருக்கிற காரணத்தால், இந்த நிலத்தின் மீது உற்பத்தியைப் பாதிக்கிற அளவுக்கு விதிக்கப்படும் வரிகளை ஒத்திவைக்கவேண்டுமென்றும் மீண்டும் இதைப் புனராலோசனை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இங்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[28th February 1963

*திரு. க. அன்பழகன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிலத் தீர்வையை உயர்த்துவதற்கும் நீர் மீது விதிக்கப்பட்ட வரியைக் கூடுதலாக்குவதற்கும் இப்போது வந்திருக்கின்ற இந்த மசோதாவை அரசாங்கத்தினுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்பதற்காக கொண்டுவந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் காரணம் கூறினாலும், இதனால் ஏற்படுகின்ற பாதகத்தைக் கருதி இதை வரவேற்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். பொதுவாகவே அரசாங்கம் வரி விதிப்பதன் கொள்கையை எண்ணிப் பார்க்கிற போது, அந்த வரி யாரிடத்தில் வசூலிக்கப்படுகிறதோ அவர்களுக்கு இதனால் எந்த இடையூறும் இல்லையா என்பதை சிந்தித்து உணர்ந்து இருக்க வேண்டும். இந்த வரியைப் பொறுத்த வரையில், பொதுவான வரியாகவே அமைந்திருக்கிறது. தக்கவர்கள் மட்டும் கட்டக்கூடிய வரியாக அமையாமல், எல்லோரும் செலுத்தவேண்டிய வரியாக உள்ளது. விற்பனை வரி எப்படி பொது மக்கள் அனைவரையும் பாதிப்பதாக அமைந்திருக்கிறதோ, அது போன்றே அமைந்திருக்கிறது. இந்த வரியின் நோக்கம் இதற்கு முன்னால் அரசாங்கத்தால் கொள்கையளவில் கூறப்பட்டது போன்று, குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு இந்த வரி விதிப்பு பாதகமாக இருக்காது என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் அளித்தால், அதற்கு வேண்டிய விதிகள் வகுக்கப்படுமென்று கூறினால், இதை நான் வரவேற்க முடியும். நில உடைமை உச்ச வரம்பு சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், நிலத்தில் குறைந்த வருமானம் பெற்றுக்கொண்டிருக்கிறவர்களுக்கு எவ்விதமான பாதகமும் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்று கூறப்பட்டது. விவசாய வருமான வரி போடப்பட்ட போதிலும், குறைந்த வருமானம் உள்ளவர்கள் செலுத்தவேண்டுமென்றில்லாமல் அதிகமான நிலம் உள்ளவர்களே செலுத்தவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதுபோன்று குறைந்த நிலம் உள்ளவர்கள் இந்த வரி மூலம் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் பலராலும் சொல்லப்படுகிறது.

4-20 p.m.

புதிய வரி நீரின் வரி மீதும் கூடுதலாக விதிப்பதன் மூலம் குறைந்த நிலத்தின் மீதும் நீரின் மீதும் விதிக்கப்படும் போது இந்தப் புதிய வரி குறைந்த நிலம் உள்ளவர்களைப் பாதிக்காமல் இருக்குமா என்பதை அரசாங்கம் ஆழ்ந்து சிந்தித்திருக்கவேண்டும். ஐந்து ஏக்கருக்கு மேல் அதிக நிலம் உள்ளவர்கள் குறைவாகையால் இதன் மூலமாக அதிகமாக வரி பெற முடியாது என்று அரசாங்கம் சொன்னால், அதன்மூலம் கிடைக்கவேண்டிய அளவு வருமானம் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று அரசாங்கம் கூறினாலும் குறைந்த நிலம் உள்ளவர்களில் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் மூன்று ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ளவர்கள் கூட இந்த நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதால். விவசாயம் கட்டிவராத நிலையில், குடும்பம் நடத்தக்கூட முடியாத நிலையில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மட்டுமாவது இந்த வரியினால் தாக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டும். எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் சொல்லியதை ஆதரித்து

28th February 1963] *[திரு. க. அன்பழகன்]*

நானும் தெரிவிக்க விரும்புகிறேன். கூடுதல் வரி என்று வழங்கப்படுவது குறித்து நான் குறிப்பிடுகிறேன். இது ஒரு கட்டணமாக இருக்குமா என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும். ஃபீஸ் என்பது கட்டணமாக அமைவதாகும். தீர்வை அல்லது வரி என்று சொன்னால் கட்டாயமாகச் செலுத்தவேண்டிய ஒன்றாக அமைந்து விடுகிறது. கட்டணமாக இருக்குமானால், புதிய நீர் வசதிகளை அந்தந்த வட்டார மக்களுக்குச் செய்யமுடிந்த அளவுக்கு அந்த வசதி அவர்களுக்குக் கிடைப்பதை ஒட்டி நீரின்மீது கட்டணம் பெறவேண்டுமென்ற நியதியை ஏற்று வரியினின்றும் விலக்குக்காட்ட வேண்டியது அவசியமானால் அதைச் செய்வதற்கு ஏற்ப கட்டணமாக இதை வசூலிக்க முடியுமா என்பதை அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும். ஏற்கனவே விதிக்கப்பட்ட தீர்வை பின்னால் வரியாக நிரந்தரமாகச் செலுத்தப்படும் ஒன்றாக வளர்ந்து வருகிறது என்று சொல்லப்படும்போது, வருகிற புதிய கட்டணம் விவசாயிகளிடமிருந்து பெற முயற்சிக்கும்போது அது நிலைபெற்றுப்போனால் மாறுதல் இன்றி கட்டாயமாக வசூலிக்கப்படும் வரியாக மாறும் நிலை இருக்குமாகையால், சட்ட முறைப்படி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 'டாக்ஸ்' என்ற பெயரில் அது இடம் பெறக்கூடாது என்று தெரிவித்தார்கள். ஃபீஸ் என்று இருக்க வேண்டுமென்று சொன்னார். செய்யப்படுகின்ற நீர், நில வசதிகள் யாருக்கேனும் கிடைக்காமல் போனால், அவர்களுக்கும் கட்டணம் கட்டாயமாக ஆக்கப்படாமல் யாருக்குப் புதிய திட்டத்தினால் நன்மை கிடைக்கிறதோ, அவர்கள் மட்டும் இதனை செலுத்தக் கூடியதாக ஆக்குவதற்கு வழி செய்ய முடியுமானால், பொது மக்களுக்குக் கூட இந்த வரி அனைவரையும் பாதிக்கவில்லை என்ற மகிழ்ச்சி ஏற்படுமென்று கருதுகிறேன். மற்ற வகையில் இங்கே விதிக்கப்பட இருக்கிற கட்டண அளவுகள் பொதுவாக விவசாயத்தில் ஈடுபட்ட மக்களுக்கு சற்று அதிகமாக இருக்கிறது என்று கருதப்படுவது பலவகையிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிகமாக வரி கூட்டப்படுகிறது என்ற கருத்து நிச்சயமாக மாற்றப்படவேண்டும். ஐம்பது சதவீதம் 70 சதவீதம் என்று இருக்கிற இந்த விகிதத்திலிருந்து குறைக்கப்படவேண்டும் என்ற பொதுவான கருத்து, தனித்தனி பகுதிகளாக தரப்பட்டிருக்கிற திருத்தங்கள் மூலமாக இந்த அவையில் தனியாக ஆராயப்பட இருக்கிறது. பொதுவாக நான் வற்புறுத்த விரும்புவது, இது வரியாக இல்லாமல் கட்டணமாக ஏற்கப்படவேண்டும் என்பதும், குறைந்த நிலம் உள்ளவர்களுக்கு இந்தக் கூடுதல் வரியால் பாதகம் ஏற்படாமல் தடுக்க வழிசெய்ய வேண்டும் என்பதும், இப்போது விதிக்கப்பட இருக்கும் வரி அளவானது குறைக்கப்படவேண்டும் என்பதும் ஆகும். அமைச்சர்களால் இவை ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டும் என்று வேண்டிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். 4–20 p.m.

(Deputy Chairman in the Chair.)

* **கனம் திரு. ஆர். வெங்கடராமன்:** உதவி சேர்மென் அவர்களே, கனம் எதிர்க்கட்சி உபதலைவர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர்

[திரு. ஆர். வெங்கடராமன்] [28th February 1963

கூறிய வாதத்துக்கு மாத்திரம் நான் பதில் சொல்ல முன் வந்திருக்கிறேன். பொதுவான பிரச்னைகளைப்பற்றி என்னுடைய சக அமைச்சராகிய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்கள்.

கனம் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் இந்தத் தண்ணீர் தீர்வையைப் பற்றி குறிப்பிடும் போது, தண்ணீர் தீர்வை (Water cess) என்பது ஒரு 'Fee' அதாவது 'கட்டணம்' தான்; இது 'Tax' ஆக (வரியாக) இருந்ததில்லை, இருக்கவும் கூடாது என்று வாதாடினர். அவருடைய வாதத்தின் கருத்து என்னவென்றுல், 'கட்டணமாக' இருந்தால், எந்த அளவுக்கு நீர்ப்பாசனத் திட்டத்துக்கு செலவு செய்யப்பட்டதோ, அந்தத் தொகையை வசூலிக்கு மளவுக்குத்தான் தீர்வை விதிக்க முடியும். வரியாக இருந்தால், நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு எவ்வளவு செலவு செய்யப்பட்ட போதிலும் கூட, எந்த அளவு வரையில் மக்களால் தாங்க முடியுமோ, அந்த அளவுக்கு வரியாக வசூலிக்க முடியும். ஆகவே கனம் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் வற்புறுத்தியது என்னவென்றுல், இதைக் கட்டணமாக வைத்து, ஒவ்வொரு நீர்ப்பாசன வசதிக்காகவும் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டதோ, அந்தத் தொகையளவு திரும்பக் கிடைக்கும்படியாக நாம் தீர்வையை விதிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அதற்கு மேற்கோளாக அவர்கள் Irrigation Cess Act-ல் அவ்விதம் தான சொல்லப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினர்கள் இந்தச் சட்டத்தின் சரித்திரத்தை நாம் படித்தோமேயானுல், நமக்குச் சில விஷயங்கள் நன்றுகப் புலப்படும். 1864-ம் வருஷத்தில் இந்த Irrigation cess சட்டத்தை முதலில் நிறைவேற்றிய போது, கனம் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் தெரிவித்த ஷாத்து அதில் இல்லை.

"For the avoidance of doubt it is hereby declared that water-cess leviable under this Act is not a tax on land but is a fee for the water supplied or used for the irrigation of land."

என்ற சொல் அப்போது இல்லை. இது 1945-ம் வருஷத்தில் தான் சேர்க்கப்பட்டது. 1864-ல் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது கூட, சில நிலங்களுக்கு ஏற்கனவேயே நீர்ப்பாசன வசதிகளெல்லாம் இருந்தன. அதற்குப் பிறகு அப்போதிருந்த சர்க்கார் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். புதிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு வந்தால், அதற்குத் தீர்வை விதிககலாமா, விதிக்கக்கூடாதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. Ryotwari Settlement செய்து விட்டால், அந்த செட்டில்மெண்டிலேயே தண்ணீர் தீர்வையும் சேர்ந்திருக்கிறது என்ற காரணத்தால், புதிதாக ஏதாவது நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினல் கூட, Ryotwari Settlement-ல் முன்னுல் சேர்ந்திருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி தண்ணீர் தீர்வை புதிதாக விதிக்கக்கூடாது என்று அன்றிருந்த சட்டத்திலேயே எடுத்துக்

28th February 1963] [திரு. ஆர். வெங்கடராமன்]

காட்ட முடியும். அந்த விதமாக சென்னை ஹைக்கோர்ட்டில் வாதாடப்பட்டது. 1942-ல் ஹைக்கோர்ட்டில் நடந்த கேஸில் தீர்ப்பு என்ன கொடுத்தார்கள் என்றால் :

I am reading the head-notes ...........

"The water-cess levied under the Madras Irrigation Cess Act of 1865 is in the nature of a land tax. Accordingly where under the grant or treaty no land tax is leviable in respect of certain land, Government have no power to levy water-cess whether it be in respect of first or second crop."

அதாவது சர்க்கார் ஏதாவது ஒரு நிலத்துக்கு வரி கிடையாது என்று சொல்லிவிட்டால், பின்னல் எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து நீர்ப்பாசன வசதி செய்தாலும், அதற்கு வரி வசூல் செய்யக்கூடாது என்பதுதான் 1865-ம் வருஷத்திய சட்டத்தின் அடிப்படை. இந்த கேஸில் அவர்கள் தெரிவித்தது என்ன என்பதைப் படிக்க விரும்புகிறேன்.

"A charge for water supply for the purpose of cultivation is a charge on land. The Madras Irrigation Cess Act levies the cess on land. I Iam now reading from M.L.J. 2 1942 page 150. In delivering the judgment of the Privy Council " in *Kandakuri Balasurya Prasada Row* v. *The Secretary of State for India in Council*, in which the appellants sought to recover from the Secretary of State for India, sums paid under protest in respect of water-cess levied under the Act of 1865, LORD PARKER OF WADDINGTON said that the cess under the Act is leviable on land which is irrigated and therefore is in the nature of a land tax. In view of this judgment there can be no doubt that the exemption certificate applies to water-cess, it being a form of land tax".

அந்த விதமாக வாதாட முடியும் என்ற நிலைமை ஏற்பட்டதால், 1942-ம் வருஷத்திய தீர்ப்பை மாற்றுவதற்கு 1946-ம் வருஷத்தில் இந்த ஷரத்தைப் போட்டோம். இந்த ஷரத்து என்னவென்றால் புதிதாக எந்த நீர்ப்பாசன வசதிகள் செய்தாலும், அந்த செலவுத் தொகையை ஈடுகட்டும் அளவுக்குப் பணம் வசூல் செய்ய Cess ஆக வசூலிக்க முடியும்; இது **land-tax** என்று கருதி இதற்கு மேல் கொடுக்க முடியாது என்று சொல்லக்கூடாது என்ற கருத்தைப் போட்டோம். இன்று இதை ஏன் மாற்றுகிறோம் என்றால், நாட்டிலே ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு சில நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு சில நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பத்து வருஷங்களுக்கு முன்பு சில நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான வருஷத்துக்கு முன்னல் நிறைவேற்றப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களால் Revenue Assessment செய்த இடத்தில் அவர்களுக்கு என்ன லாபம் வந்தாலும் தண்ணீர் தீர்வை போடக்கூடாது. நூறு வருஷங்களுக்கு முன்பு இடைக் காலத்தில் நிறைவேற்றப்பட்டதாக இருந்தால், அந்தக் காலத்தில்

[திரு. ஆர். வெங்கடராமன்] [28th February 1963

